# கடந்த 4 வருடங்களாக யாழ் பெரியாஸ்பத்திரி சுகாதார அமைச்சினால் புறக்கணிக்கப்படுகிறது

இலங்கையில் உள்ள எட்டுப் போதனா வைத்திய சாலைகளில் ஒன்றான யாழ் பெரியாஸ்பத்திரிக்கு வழங்க வேண்டிய சலுகைகளை சுகாதார அமைச்சு கடந்த நான்கு வருடங்களாக திட்டமிட்ட அடிப்படையில் தட்டிக் கழித்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் முரசொலிக்கு தெரிவித்தன. கடந்த நான்கு வருடங்களாகவே மருந்து வகைகள், உபகரணங்கள், அம்புலன்ஸ். ஊழியர்கள் பற்றாக் குறை பற்றி பல அமைப்புக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்ட போதிலும் எது வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இதேபோல வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளும் நாட்டின் சிங்களப்பகுதி வைத்திய சாலைகளுக்கேபோய்ச் சேருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது அத்துடன் கொழும்பு, கண்டி,காலி, றாகம, பேராதனை, கொழும்பு தெற்கு போதனாவைத்திய சாலைகளின் பணிப்பாளர்களுக்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4.50

# முரசொலி

முரசு 05 ஒலி 62 பிரமோதூத தை 15 (28-01-1991) திங்கள்

## நியாயவிலையில் பொருள்கள் வர்த்தகர் தலை மறைவு

பருத்தித்துறையில் நியாயவிலையில் சில அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவர் நேற்றுத் தமது கடையைப் பூட்டி விட்டு மறைந்து விட்டாராம். வீதியின் இருமருங்கிலும் நீண்ட கியூவில் வெய்யிலில் நண்பகல் வரை மக்கள் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பியதைக்காண முடிந்தது. இவரது கடையில் பணிபுரியும் சிப்பந்திகளும் கடை மூடப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் திரும்பினர். (38)

# சமரசமானதீர்வு சாத்தியமில்லை!

## பேராசிரியர் பீற்றர் ஷோல்க் கருத்து

"சமரச முயற்சிகள் பயனளிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படவில்லை என்பதை மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்" என தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீற்றர் ஷோல்க் முரசொலிக்குத் தெரிவித்தார்.

சுவீடனில் உள்ள புகழ் பெற்ற உப்சலா பல்கலைக் கழகத்தின் [illegible] வரலாற்றுத்துறைப் பேராசிரியராக விளங்கும் ஷோல்க் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்தார். உப்சலா பல்கலைக் கழகத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையே ஒரு பரிவர்த்தனை உடன் படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஷோல்க் யாழ்ப்பாணம் புறப்படுமுன் ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிறாட்மன் வீரக்கோனைச் சந்தித்தமையால் அவருடைய வடபகுதி விஜயம் ஒரு சமரச முயற்சியாகவும் இருக்கலாம் என பத்திரிகைகள் ஊகங்கள் வெளியிட்டிருந்தன. ஆனால் பேராசிரியர் நேற்று அளித்த செவ்வி ஊகங்களுக்கு ஆப்பு வைப்பதாய் அமைந்தது.

"1920ஆம் ஆண்டு தொடக்கம் தமிழருக்கு நீதி வழங்க எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் நுணுக்கமாக ஆராய்ந்தேன் தமிழருடைய சுய நிர்ணய உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் தற்போதைய சூழ்நிலையில் ராஜதந்திர முயற்சிகள் மட்டும் பயன்தரும் என்று நான் கருதவில்லை. சர்வதேச மட்டத்தில் சமரச முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார் பேராசிரியர் ஷோல்க்.

"இலங்கைஇனப்பிரச்சினையில் அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் சமரசம் செய்ய முன்வந்த போதும் இந்தியா ...04 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி வங்கிகளில் பணப்புழக்கம் இல்லை

கிளிநொச்சியில் இயங்கும் வங்கிகளில் கடந்த பல மாதங்களாக எந்த வித பணக் கொடுக்கல் வாங்கல்களும் நடைபெறுவதில்லை என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

வைப்புச் செய்யப்படும் பணத்தைக் கூட வங்கிகள் ஏற்றுக் கொள்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் பணப் புழக்கம் வெகுவாகக் குறைந்து காணப்படுவதுடன் காசோலை கொடுக்கல் வாங்கல்களே அதிகம் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது. (70)

## முல்லைத்தீவுப் பகுதியில் 50 ஆயிரம் மீனவர் பாதிப்பு

முல்லைத்தீவில் கரையோரப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டதை யடுத்து கடந்த ஐந்து மாதங்களாக ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலை இழந்துள்ளனர்.

கடற்படையினர் இராணுவத்தினர் கடலில் கண்காணிப்பை ஏற்படுத்தியிருப்பதால் ஆழ் கடல் மீன்பிடித் தொழில் தடைப்பட்டுள்ளது.

கடலில் தென்படும் மீனவர்கள் சுடப்படுகின்றனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் சுக்ளா கொழும்பு விஜயம் இலங்கை அகதிகள் குறித்தும் பேச்சு

இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா இன்று கொழும்பு வருகிறார். மூன்று நாள் தங்கியிருக்கையில் இவர் ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீடமைப்புத்திட்ட நிதி உதவி வழங்க சுவீடன் மறுப்பு

கடந்த வருடம் சுவீடன் அரசு மகாவலி அபிவிருத்தித் திட்ட வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கு என அன்பளிப்பாக வழங்கிய 50 மில்லியன் ரூபாவினை இலங்கைஅரசு வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைக்கு பயன் படுத்தியுள்ளது தெரியவந்துள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடுகள் வழங்கிய வைத்திய உபகரணங்களை அனுப்பக் கூட்டுப்படை மறுப்பு

இருவருடங்களுக்குமுன்னர் ஐ. நா. சபையின் தென் ஆசியப்பகுதி வடக்குக் கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைத்த இருபது மில்லியன் பவுண் பெறுமதியான வைத்திய உபகரணங்களையும், நிதியையும் இங்கு வழங்க கூட்டுப்படைத் தலைமையகம் மறுத்துவிட்டது.

இதில் யாழ் வைத்திய சாலைக்கு வந்த இரு மில்லியன் பவுண் பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் அடங்கும்.

இதேவேளை வைத்தியசாலைக்கென அமெரிக்க மக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட மருத்துவ உப

...04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் ஹெலி சேதம்

மன்னார் பகுதியில் தாக்குதலில் ஈடுபட்டிருந்த ஹெலிகப்டர் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் தீப்பற்றியதாகவும் இது உடனேயே தள்ளாடி ராணுவ முகாமில் தரையிறக்கப்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## அகதிகளுக்கு வந்த சீனி மூடை ரெலோ உறுப்பினரால் விற்பனை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவாஞ்சிக் குடி பகுதியில் உள்ள அகதிகளுக்கு வழங்குவதற்கென கூட்டுறவுச் சங்கத்திற்கு வந்த 20 மூடை சீனியை ரெலோ இயக்கஉறுப்பினர் மாமா என்பவர் எடுத்து விற்றுள்ளார்.

36 ம் கிராமத்தில் உள்ள

—04 ஆம் பக்கம் பார்க்க

## வல்வை அகதிகளுக்கு நிவாரணம்வழங்கப்படுகிறது

வல்வெட்டித்துறையிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது.

நெடியகாடு, முத்துமாரி ஆகிய கிளைக்கு பொலிகண்டியிலும், ஆதி கோவிலடி வல்வை இல 13 கிளைக்கு ஆத்தியடியிலும் மற்றைய கிளைகள் அந்தந்த கிளைகளிலும் நிவாரணம் வழங்கப்படுகிறது. (38)

## தமிழ் நாட்டில் வீதி மறியல் போராட்டம்

தமிழக அரசை மத்திய அரசு கலைக்குமாறு கோரி இன்று தமிழகம் எங்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் அ. தி. மு. க வினரும் வீதி மறியல் போராட்டம்நடாத்த

...04 ஆம் பக்கம் பார்க்க

## சோமாலிய ஜனாதிபதி தப்பினார் ஆட்சி தேசிய காங்கிரஸ் வசம்

சோமாலியாவில் ஜனாதிபதி சியாத் பரே ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். சோமாலியா தேசியக் காங்கிரஸின் கெரில்லா அமைப்பான சோமாலியா தேசிய விடுதலை இயக்கம் நேற்றுத் தலைநகர் மொகடிசியோவை முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது.

ஜனாதிபதி அலுவலகத்தை

...04 ஆம் பக்கம் பார்க்க

## வீரவேங்கை பற்றிக்கிற்கு பொதுமக்கள் அஞ்சலி

வீரமரணமடைந்த வேங்கை பற்றிக்கின் (கணேசலிங்கம் சின்னராசா, ஆறாம் வட்டாரம் சாம்பல்தீவு திருமலை) புகழுடல் நேற்றுக்காலை கல்லியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெருந்திரளான மக்கள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சென்ரல் காம்ப் பகுதியில் இருவர் உயிருடன் எரிப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள சென்ரல் காம்ப் எனும் இடத்தைச் சேர்ந்த 2 பொதுமக்களை இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர்.

கடந்த 20-ம் திகதி பிடித்துச் சென்ற இவர்களை உயிருடன் ரயர் போட்டு எரித்துக் கொலை செய்துள்ளனர். (71)

## சிறு விளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம் ''சித்திராலயா'', இல. 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில், கம்பன்கோட்டம் முன்பாக). 01175

### கல்வி

தைப்பூசத் தினத்தில் 30. 1. 91 புதன் மிருதங்க வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும். பின்பு வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலையும், மாலையும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் நடாத்தப்படும். விபரங்களுக்கு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1 நாவலர் வீதி, (மிருதங்க தொழில் வகுப்புநிலையம்), யாழ்ப்பாணம். 01192

### விற்பனைக்கு

மார்ச் 1991 O/L பரீட்சைக்கு உதவியாக Dec 1990 இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள்த் தொகுதி (ஆங்கிலம். சமூகக்கல்வி, சமவுயரக்கோட்டுப்படம் வினாத்தாள் உட்பட) விற்பனையாகிறது. மொத்தமாக வாங்குவோர்க்கு விலைக் கழிவு உண்டு. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக் கொள்ள முடியும். எக்ஸ்பிறஸ்இன்ஸ்ரிரியூட், இருபாலைச் சந்தி. 01159

## இயற்கைப் பசளை

புதுக்குடியிருப்பு பகுதியில் இயற்கைபசளையைப்பாவித்து விவசாயம் மேற்கொள்ள புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

கால்நடைகள் அதிகமாகவுள்ள இப்பகுதியில் எருவைச் சேகரித்துஎதிர்வரும்சிறுபோக வேளாண்மைக்கு இம்முறை கையாளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (38)

## பல படகுகள் பலத்த சேதம்

கொம்படிவெட்டை கடல் வழிப்பாதையில் சேவையில் ஈடுபடும் கண்ணாடியிழை வள்ளங்கள் கடலோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையில் மிகவும் தாழப் பறந்து வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று படகுகள் மீது துப்பாக்கி வேட்டுக்களை சரமாரியாகத் தீர்த்தது.

இதனால்இருபதுக்கும்மேற்பட்ட படகுகள் சேவையிலீடுபடுத்தமுடியாத அளவுக்கு மிக மோசமாகச் சேதமடைந்தன. (18)

# ரூ.300 சம்பள அதிகரிப்பு 35 ஆயிரம் பயிற்சி ஆசிரியரும் பெறுவர்!

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 300 ரூபா சம்பள அதிகரிப்பு 35 ஆயிரம் பயிற்சி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. போன்று 1990ஆம் வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து இச்சம்பள அதிகரிப்புவழங்கப்படவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வருடாந்தம் பத்துக்கோடி ரூபா செலவேற்படும் என்று திறைசேரி அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

## 'இராணுவத்தின் பார்வையில் தமிழர் என்றால் புலிகளே'

''ஸ்ரீலங்கா இராணுவத்தின் பார்வையில் தமிழன் என்றால் புலி என்ற நினைப்புத்தான். அடக்கு முறைக்கு எதிரான, போராட்டத்தில் இன்னமும் ஒதுங்கும் நிலை கூடாது. சகலரும் தத்தம் பங்களிப்பைச் செய்ய வேண்டும்.''

இவ்வாறு கைதடி ராஜபுரியில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசுகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கைதடிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு சுரேன் கூறினர்.

இந்நிகழ்ச்சியில் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

## மாங்குளம் மக்கள் வங்கி இடமாற்றம்

மாங்குளத்தில் ஏழு மாதங்களாகச் செயற்படாமலிருந்த மக்கள் வங்கிக் கிளை அலுவலகம் துணுக்காயில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மாங்குளத்தில் ஏற்பட்ட இராணுவக் குண்டுவீச்சின் போது மக்கள் வங்கி ஆவணங்கள், தளபாடங்கள், கடன் விண்ணப்பங்கள், பணக் கொடுப்பனவுகள் அனைத்தும் எரிந்து சாம்பரானதால், துணுக்காயில்வங்கி ஆரம்பித்த போதிலும் வங்கியின் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்த முடியாத நிலையில் உள்ளது. (38)

## இ.போ.ச ஊழியர்கள் அவதி பரிகாரம் தாமதமாகிறது

வடபிராந்திய இ. போ. ச ஊழியர்கள் கடந்த சில மாதங்களாகத் தமக்கு வேதனம் வழங்கப்படாமையால் பெரிதும் இடருறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய இலாகாக்கள் பலவற்றின் உயரதிகாரிகள் தம் ஊழியர் படும் துயர் உணர்ந்து பல்வேறு கிரமங்களின் மத்தியிலும் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் இடைவிடாது தொடர்பு கொண்டு வேதனம் அனுப்பப்பட முயற்சி மேற்கொண்டு வெற்றியும் அடைந்து வருகின்றனர்.

ஆனால் இ.போ.ச உயர் மட்ட அதிகாரிகளோ (ஒரு சிலர் தவிர) தம்மை வேதனம் கிடைக்காத நிலை 'பாதிக்கவில்லை' என்பதால் அசமந்தப் போக்கில் இருக்கிறார்கள் என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

## மாவீரர் - தின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**கவிதை**

மத்தியபிரிவு: 1 ஆம் இடம் சி. சுதர்சினி, மெதடிஸ் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை 'இனியொரு சூளுரைப்போம்' 2 ஆம் இடம்: எஸ். பிரபாகரன், கரவெட்டி மத்தி, கரவெட்டி 'விண்ணுலகிலிருந்து வந்த கடிதம்' 3 ஆம் இடம்: ரமணி ராஜரட்ணம். நொச்சிமோட்டை, ஓமந்தை 'எங்குற்றீர்...?'

மேற்பிரிவு: 1ஆம் இடம்; தயாளினி தர்மலிங்கம், குடத்தனை மேற்கு, குடத்தனை 'மண்ணாகப் போகிறேன்' 2ஆம் இடம்: சின்னத்தம்பி, ஸ்ரீவதனா, ஆனைக்கோட்டை 'என் கல்லறைமீதும் பூக்கள் மலரும்' 3ஆம் இடம்: வேதாரணியம் தனேஸ்குமார் (தேனு) அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி 'புதியதோர் பூமியில் புலிக்கொடி பறக்குது'

**கவிதை**


தனியார்: 1 ஆம் இடம்: சி. குமரவேள், 466, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 'யூ கே. இல் நானும்...... களத்தில் அவனும்......' 2 ஆம் இடம்: முருகனடியான், இல 174, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 'எங்களின் தளபதி தம்பி பிரபா' 3 ஆம் இடம்: தே. குயின் சயிலா, 85, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 'பேச்சும் மூச்சும்...'

**நாவல்**

நாவல் போட்டிக்கு போதியளவு ஆக்கங்கள் வந்து சேரவில்லை. ஆறு எழுத்தாளர்களே நாவல் போட்டியில் கலந்து கொண்டனர். ஆயினும் வந்து சேர்ந்த நாவல்களில் இலக்கியத்தரம், மொழிவளம், அமைப்பு முதலிய அம்சங்கள் போட்டியில் பரிசு பெறும் தரத்தில் அமைந்திராத காரணத்தால் நாவல் போட்டிக்கு பரிசுகள் வழங்கப்படவில்லை.

நாவல் போட்டிக்குத் திருவாளர்கள் எஸ். இராஜநாயகம், நா. சுப்பிரமணிய ஐயர், க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





லெப்டினன் பக்கி வீரவேங்கை பரதா

வீரஜனனம்: 7-8-1971
வீரமரணம்: 9-1-1990

அன்பு மகனே ஆருயிர்த் தம்பியே
வீரவேங்கையே பக்கி
உன்னை எப்படி மறப்பது இந்த இளம் வயதினிலே
இனத்தின் விடுதலையே இலட்சியமாகக் கொண்டு
இன்னுயிரைக் களத்தினிலே ஈந்தவனே
பாயும் புலியே நந்தகுமாரா
புலோப்பளையில் புறப்பட்ட
இந்திய இராணுவத்துடன் நேரடி
மோதலில் நிமிர்ந்தாய்
நிலைசாய்ந்து கிடந்த எதிரியின் ஆயுதத்தை
எடுத்தபோது நெஞ்சினில் குண்டினை ஏந்தி
வீழ்ந்தாய் வேங்கைகள் வீழ்வதில்லை
நந்தகுமாராய் மீண்டும் தமிழீழத்தில்
எழுவாய் மலரும் சுகந்தத்தில்
உன் வரலாறு நனவாகப் பரிமளிக்கும்

இவருடன் வீரமரணமடைந்த மூன்று போராளிகளுக்கும் எங்கள் இதய அஞ்சலிகள்

ச. பரஞ்சோதி
நாவற்குழிச்சந்தி.

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
01195

## தாதிப் பயிற்சி நெறி

**Diploma in Nursing**

10-2-1991. இல் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

($1\frac{1}{2}$ வருட காலப் பயிற்சிநெறி)

விபரங்கட்கு:-

அதிபர்
சாயி மெடிக்கல் அக்கடமி
இல. 6, பருத்தித்துறை வீதி. (முதலாம் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

01160

## நாவலர்

சித்தன்கேணி

**அளவையியல்**

திரு. சுப்பிரமணியம்

90 A/L - விஞ்ஞானிகள்
சனி 4.00pm, ஞாயிறு 5.00pm

91 A/L - குறியீட்டு அளவையியல்
சனி 3.00pm, ஞாயிறு 4.00pm

92 A/L - ஆரம்ப அளவையியல்
சனி 5 00pm, ஞாயிறு 3 00pm

**தூய பிரயோக கணிதம்**

90 A/L- தளக்கேத்திர கணிதம்
- அமுக்கமையம்

91 A/L- வட்டம்
- வட்ட இயக்கம்

92 A/L- திரிகோண கணிதம், சார்புகள்
- காவிகள்,
நீர்நிலையியல்.

By Mr.A.சந்திரமோகன்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

01163

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்

### கப்டன் றோய்

(மயிலிட்டி)

இவரது மறைவையொட்டி எமது துயரில் பங்கேற்று அனுதாபம் தெரிவித்த சகலருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் 30. 1. 90 அன்று நெல்லியடி இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவருக்கு சிகிச்சையளித்த வைத்தியத்துறையினருக்கும் குறிப்பாக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கேணியடி.
நெல்லியடி
(பெற்றோல் நிலையம் முன்பாக)

குடும்பத்தினர்.

01194

# 'போராளிகளினதும் - மக்களினதும் இரத்தத்தால் செம்மையானது இந்தமண்'

''இந்த மண் பல போராளிகளினதும், ஆயிரக்கணக்கான மக்களினதும் இரத்தத்தினால் செம்மையானது. எதிரியைச் சுற்றி எமது போராளிகள் காவல் அரண்களை அமைத்து அவன் எமது மக்களை அழிக்க வெளியேறும் முயற்சியை முறியடித்து வருகின்றனர். இந்த வேளைகளில் மரணத்தையும் தழுவுகின்றனர். எந்த மக்களுக்காக அவர்கள் மரணிக்கிறார்களோ அந்த மக்கள்தான் அவர்களது பணியைத் தொடர வேண்டும்''

மேற்கண்டவாறு ஏழாலை மேற்கு சனசமூகநிலையத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பேசுகையில்விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களின் ஒருவரான திரு. தினேஷ் கூறினார்.

## போராளிகள் மரணிக்கையில்..

அவர் தொடர்ந்து பேசுகையில், ''போராளிகள் மரணிக்கும்'' போது அல்லது காயமடையும் போது அந்த இடத்தை ஈடுசெய்வதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

இது உங்களது மண் என்ற உணர்வுகொள்ள வேண்டும். அந்த உணர்வின் மூலம் எமது தேசத்தின் சுதந்திரத்தை வளம்படுத்த வேண்டும். எமது மண்ணில் தான் எம்மை அழிக்கும் ஆக்கிரமிப்பாளர்களின் முகாம்கள் இருக்கின்றன. அவற்றை இங்கிருந்து அகற்றுவதென்றால் நாம் எல்லோரும் ஆயுதமேந்த வேண்டும் என்ற உண்மையைப் புரிந்து கொள்வதோடு நிற்காது செயலிலும் காட்டவேண்டும். எமது வெற்றிகளுக்கு செயற்பாடுகளே உதவிசெய்கின்றன.

## சுதந்திரமாக வாழ.....

பொது எதிரியான சிங்களப் படைகளை இங்கிருந்து விரட்டியடிக்க வேண்டுமானால், எமதுமண்ணில் சுதந்திரமாக, அமைதியாக நாம் வாழ வேண்டுமானால், எமது கடல்களில் எமது கப்பல்களும், எமது வான்களில் எமது விமானங்களும் பறக்க வேண்டுமானால், எமது சமூக வியாதிகளான சாதி, சமய ஏற்றத்தாழ்வுகள் தீர வேண்டுமானால் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு அணிதிரள வேண்டும், இல்லையேல் பொது எதிரியின் வரவை நாமே ஏற்படுத்தி அழிந்து போகும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட நேரிடும் என்ற உண்மையை உணர வேண்டும், செயலில் காட்ட வேண்டும்'' என்றார்.

இக்கருத்தரங்கில் மக்கள் முன்னணியின் மற்றும் பிரமுகர்களான வரதன், பரா, மகளிர் முன்னணியைச் சேர்ந்த சபீனா உட்படப் பலரும் பேசினர்.

# வளைகுடா நீர்ப்பரப்பில் எண்ணெய்க் கசிவினால் தீ

வளைகுடா நீர்ப்பரப்பின்மீது பரவிப் படர்ந்துள்ள பெருமளவு எண்ணெய்க் கசிவுப் படலங்கள் தீப்பற்றி எரிவதாக நேற்றுப் பிற்பகல் அறிவிக்கப்பட்டது. ஈரான் நோக்கிக் கரும்புகை மேகத் திரளாகச் செல்வதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூறினர். அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை நடவடிக்கையால் இத்தீ ஏற்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். எண்ணெய்ப் படலத்தால் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண எண்ணெய்க் கசிவுத் தடுப்பு வல்லுநர்கள் குழு ஒன்று அமெரிக்காவிலிருந்து சவூதிஅரேபியாவுக்கு விரைகிறது

# 'புலிகளின் குரல்' புகட்டும் புத்திமதி

அந்நியர் ஆதிக்கத்தை எதிர்க்கும் நாம் இன்னமும் ஆங்கில மருத்துவத்தையே உயர்வாக எண்ணிக் கைக்கொண்டு உள்ளூரில் உள்ள சுதேசிய மருத்துவத்தைப் புறக்கணிக்கலாமோ? தமிழீழ விடுதலைப் புலிகள் ஒலிபரப்பும் ''புலிகளின் குரல்'' நிகழ்ச்சியில் சனிக்கிழமை தோறும் இடம்பெறும் 'சிந்தாமணி' தொடர் நாடகம் இத்தனித்துவ உண்மையினை எளிய நடையில் மக்களுக்கு உணர்த்தி வருகிறது. பல நோய்களுக்கும் உள்ளூர் மூலிகைகள் மற்றும் சித்த மருத்துவ முறைகளும் பரிகாரமாகின்றன என்பது ஆதார பூர்வமாக இந் நாடகத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.

# பயணிகள் இடர்

சங்கானை உறாட்டிப்பனை அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள வாய்க்கால் கடந்த நான்கு வருடகாலமாக எவ்வித திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது.

இதனால் இப்பாதையினூடாகச் செல்லும் பிரயாணிகள் பலத்த சிரமத்தின் மத்தியில் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

எனவே இவ் வாய்க்கால் பாதையை திருத்த சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து உரிய நடவடிக்கை யெடுப்பார்களா எனக் கேட்கப்படுகிறது.

(ப11)

# இன்று வருடாந்தக் கூட்டம்

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (37)

# நிர்வாகிகள்

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலய அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: சி. தார்சீசியஸ் (அதிபர்) உப - தலைவர்: மு. ஜெகதீசன், செயலாளர்: ப. கனகசிங்கம் உப-செயலாளர்: நா. அரசரத்தினம் பொருளாளர்: நா. திருச்செல்வம் செயற்குழுவும் தெரிவானது.

# கூட்டுறவுச் சங்கங்களின் பணம் அரசால் திரும்பப் பெறப்பட்டது

யாழ் மாவட்டத்திலுள்ள சில பல நோ. கூ. சங்கங்களின் அசமந்தப் போக்கினால் நட்டஈடாகக் கிடைக்க விருந்த பல கோடி ரூபா கொழும்புக்குத் திரும்பியுள்ளது.

1987ஆம் ஆண்டு இடம் பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் சேதமாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கட்டிடங்கள், வாகனங்கள், தளபாடங்கள் ஆகியனவற்றிற்கு நட்டஈடாக வழங்க பெருந்தொகைப் பணம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியாக வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இழப்புகளை நிரூபிக்கும் ஆவணங்களை இச்சங்கங்கள் உரியகாலப்பகுதியில் அனுப்பி வைக்கத் தவறியமையால் இந்நிதியை இலங்கை அரசு திருப்பிப்பெற்றுள்ளது. (66)

# பஞ்சபூதங்கள் பற்றிய காஞ்சிப் பெரியவரின் விளக்கம்

பாமரர் முதல் பாண்டித்தியம் பெற்றவர்வரை தாள் பணிந்து வணங்கி கௌரவிக்கும் காஞ்சிப்பெரியவர்கள் அருளிய உரையினை நேற்றுமுன்தினம் திருச்சி வானொலி ஒலிபரப்பிற்று. அதில் முக்கிய பகுதி ஒன்று இங்கே தரப்படுகிறது. சங்கராச்சார்ய சுவாமிகள் சொல்கிறார்; ''பஞ்சபூதங்களுக்கு உடம்பில் ஐந்துவகையான அறிவுகள் இருக்கின்றன பார்க்கும் சக்தியுள்ள கண், கேட்கும் காது, ருசிக்கும் நாக்கு, உஷ்ணம், சீதம் தெரிந்து கொள்ளும் ஸ்பரிசேந்திரியம் கந்தம் தெரிந்து கொள்ளும் மூக்கு ஆகியவையே அந்த ஐந்தும் ஆகும். ஸ்பரிசம் என்பது உடம்புமுழுவதும் இருக்கிறது. கண், நாக்கு, மூக்கு, உணர்ச்சி(துவக்) காது என்னும் ஐந்துஇந்திரியங்களுக்கும் ரூப், ரஸ, கந்த, ஸ்பரிச சப்தங்கள் விஷயமா கின்றன. இந்த ஐந்து குணங்களையும் பகவான் பஞ்சபூதங்களில் வைத்திருக்கிறார்.''

# சுகாதாரம், நிவாரணம், வீடமைப்பு யாழ். செஞ்சிலுவைச் சங்கப்பணிகள்

தைப்பொங்கல் தினத்தன்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (யாழ் பிரிவு) சுதேசிய பொருள் விற்பனை நிலையமொன்றைத் திறந்து வைத்தது. அவ்வமயம் வெளியிடப்பட்ட 1990 ஆண்டுக்கான அறிக்கை சங்கம் ஆற்றியுள்ள பணிகள் பற்றிப் பல பயனுள்ள தகவல்களைத் தருவதால் அதிலிருந்து சில முக்கிய பகுதிகளை வாசகர்களுக்குத் தருகின்றோம்.

## வீடமைப்புத்திட்டம்

கடந்த வருடம் தைமாதத்தில் விமன்காமத்தில் 82 வீடுகள் அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிக்கப்பட்டன. ஒரு நீர் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு 309 வீடுகள் வடமராட்சிப் பகுதியில் அமைக்க எல்லா ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் ஆனி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

## ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு

1990 தைப்பொங்கல் தினத்தன்று விமன்காமத்திலும், வாதரவத்தையிலும் இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதற்குப் பொறுப்பாக இரு கிராமிய சுகாதார உதவியாளர்கள் இருந்து வருகிறார்கள். இதில் சகல சேவைகளையும் அப்பகுதி மக்களுக்கு வழங்கி வருகின்றோம் 1990ஆம் ஆண்டு மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் வடமராட்சிப் பகுதியில் அமைக்க ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது பகுதி ஆரம்ப சுகாதார கவனிப்புக்கென ஓர் அனுபவம் வாய்ந்த திட்ட உத்தியோகத்தரும், சுகாதார போதனாசிரியரும், சேவையாற்றி வருகிறார்கள்.

## நடமாடும் சுகாதார சேவை - 1990

ஒரு குழு எமது வைத்திய அதிகாரியின் தலைமையில் 10 தெரிவு செய்யப்பட்ட சுகாதாரத்தில் பின் தங்கிய கிராமங்களில் செயலாற்றியது. ஆனி மாதத்தின் பின்னர் அகதி முகாம்களுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

## முதலுதவிப்பிரிவு அவசர சிகிச்சைப்பிரிவு அம்புலன்ஸ் சேவை

1990 ஆரம்ப பகுதியில் எமது முதலுதவிப்பயிற்சியும், வேறு சுகாதாரப் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. ஆனியின் பின்னர் இச் சேவைகள் மிகவும் பயனுள்ளனவாக அமைந்தன. இதில் சம்பந்தப்பட்ட தொண்டர்களினதும் ஊழியர்களினதும், உறுப்பினர்களினதும் தன்னலமற்ற சேவையினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

## வரட்சி நிவாரண சேவை

எமது நீர் வழங்குத் திட்டம் வாதரவத்தை, நெடுந்தீவு வேலணைப் பகுதிகளில் சேவையாற்றி வந்துள்ளது.

## நிவாரண சேவைகள்

ஆனி தொடக்கம் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக பெரும் தொகையான மக்கள் இடம் பெயர்ந்து வெளிமாவட்டங்களிலிருந்து பெரும் தொகையினர் வடக்கு நோக்கி இடம் பெயர்ந்து எமது மாவட்டம் வரவேற்பு மாவட்டமாகவும் மாறியது. அரசசார்பற்ற நிறுவனங்கள் பெரும் பங்களிப்புச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அகதிமுகாம்களில் தங்கியுள்ளோர்க்கு அரிசி- 35, 681, கிலோ, சீனி-46, 183 கிலோ, மா-1, 568கிலோ, கௌபி 950 கிலோ, தேயிலை-376 பக்கட், ஜீவாகாரம் - 1000 பக்கட், தாவர எண்ணெய் -1729 போத்தல், பருப்பு - 1329, லக்ஸ்பிறே 180 பக்கட், சோயாமீட்- 89 பைக்கட், தேங்காய் 434, செத்தல்மிளகாய்-908 கிலோ, கருவாடு - 9088 சவர்க்காரம் 3834. முதலிய உலர்உணவுப் பொருட்களை எமதுநிறுவனம் வழங்கியது.

## சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டம்

இத் திட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் பல பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. வாழை நாரில் பொருட்கள் செய்யும் பயிற்சித் திட்டமும் பல தொண்டர் நிறுவனங்களின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

## தமிழ்ப் பகுதியில் இதர மாவட்டங்களிற்கான உதவிகள்

வவுனியா, மன்னார் அத்துடன் முல்லைத்திவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு உடுபுடவைகளையும் உலர் உணவுப்பொருட்களையும் வழங்கியது. 1990 ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்களுக்கும், குடும்ப உழைப்பாளரை இழந்த குடும்பங்களுக்கும், 1424 உடுபுடவைப் பொதிகளையும், 1830 காயமுற்றவர்களுக்கும் வீடு பாதிப்புற்றவர்களுக்கும் உலர் உணவுப் பொதிகளையும் வழங்கியுள்ளது. வட பகுதியில் உள்ள இதர நான்கு மாவட்டங்களில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக்கிளைகளுக்கு நிர்வாக செலவினத்திற்காக நிதி வழங்கியுள்ளோம்.

ஆனி மாதம் முதல் இதுவரை முல்லைத்திவு மாவட்டத்தில் இரு நடமாடும் சுகாதார சேவைக் குழுக்கள் இயங்கி வருகின்றன. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு விசேடமாகத்திட்டங்கள் தயாரித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் உதவியுடன் நடத்தப்படுகின்றன.

வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, அரியாலைப் பகுதிகளில் தற்காலிக குடிசைகள், மலகூடம் உட்பட அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

தீவுப்பகுதி மக்களுக்கான விசேடமாக உணவு சென்றடைய சர்வதேசக் குழுவின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. யாழ் வைத்தியசாலை மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது மாற்று நடவடிக்கையாக மானிப்பாய் ஆஸ்பத்திரியை இயக்க உதவியதையும் திரும்பவும் யாழ் வைத்தியசாலை திறந்து நடாத்த உதவியதையும் குறிப்பிடலாம்.

Murasolie | REGISTERD AS A NEWS PAPER IN SRI LANKA | 28-01-1991 | திங்கட்கிழமை

# ஈராக்மீது நடக்கும் விமானக் குண்டுவீச்சிற்கு

# ஐ.நாவே காரணம் என்கிறது ஈராக்

தற்போது ஈராக் மீது நடைபெறும் விமானத் தாக்குதல்களுக்கும், ஈராக்கியர் பலர் கொல்லப்படுவதற்கும் ஐ.நா. சபையும் அதன் செயலாளர் பெரஸ்டி குயிலருமே முக்கிய காரணமானவர்கள் என ஈராக் வெளியுறவு அமைச்சர் அஸீஸ் கண்டித்துள்ளார்.

### பள்ளிவாசல் மீது குண்டு வீச்சு அமெரிக்கா மறுப்பு

ஈராக் தனது பள்ளிவாசல்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடாத்துவதாக குற்றம் சாட்டியுள்ளது. எனினும் இதை மறுத்துள்ள அமெரிக்க தரப்பு தமது விமானிகள் இலக்குத் தவறாமலே தாக்குவதாகக் கூறியுள்ளது.

### சமரச முயற்சியில் அரபு நாடுகள்

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றினைக் கொண்டுவரும் முயற்சியில் ஈரான் இறங்கியுள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் அல்மஸ்ரி தெஹ்ரானிக்கு சென்றுள்ளார். இதேசமயம் எகிப்திய ஜனாதிபதி முபராக்கின் செய்தியுடன் எகிப்து வெளியுறவு அமைச்சர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் பேச்சு நடாத்த வோஷிங்டன் செல்கிறார்.

### ஈரான் நடுநிலை வகிக்கிறதாம்

ஈரானில் 24 ஈராக்கிய விமானங்கள் தரையிறங்கியிருப்பதாக அமெரிக்கா கூறியதை ஈரான் மறுத்துள்ளது. தாம் வளைகுடாவில் நடுநிலை வகிப்பதாக ஈரான்பதிலளித்திருக்கிறது.

### உலகின் மிகப்பெரும் எண்ணெய் ஒழுக்கு

வளைகுடாவில் வெடித்த போரினால் பாரசீகக் கடலில் பெருமளவு எண்ணெய்ப் படலம் கலந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப் படலம் கடலில் 30 மைல் நீளத்திற்கும் மூன்று மைல் அகலத்திற்கும் காணப்படுகிறது. உலக வரலாற்றில் இதுவே மிகப்பெரிய எண்ணெய் ஒழுக்கு எனக் கூறப்படுகிறது.

இதனிடையே கடலில் கலந்த எண்ணெய்ப் படலத்தை அழிக்க லேசர் குண்களை கடலில் வீச அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

### துருக்கியில் குண்டு வெடிப்புகள்

துருக்கி தலைநகர் அங்காராவில் ஜப்பான் மற்றும் சவுதி அரேபியா விமான சேவை அலுவலகங்களில் நேற்றுக் குண்டுகள் வெடித்துள்ளன. எனினும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

### இஸ்ரேலியரின் உளவியல் ஊக்கம்

பல நாள்களின் பின்னர் இஸ்ரேல் பாடசாலைகள் திறக்கப்பட்டு நேற்று பெருமளவிலான மாணவர்கள் சென்றதாக அறிவிக்கப்படுகிறது. ஈராக்கின் ஸ்காட் ஏவுகணைத் தாக்குதலை தொடர்ந்தே இப் பாடசாலைகள் மூடப்பட்டன. இஸ்ரேலியரிடையே உளவியல் ரீதியான உற்சாகம் வழங்கவே இந் நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

### பாகிஸ்தானிய வைத்தியர்கள் ஈராக்கிற்கு

எழுநூறு பாகிஸ்தானிய வைத்தியர்கள் தமது சுயவிருப்பின் பேரில் ஈராக் சென்றுள்ளனர். இவர்கள் குண்டு வீச்சில் காயமடையும் ஈராக்கியருக்கு சிகிச்சை அளிக்கப்போவதாகக் கூறியுள்ளனர். பாகிஸ்தானிய ராணுவத்தில் ஆயிரம் பேர் அமெரிக்க நேச அணியில் இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொண்டமானாறில் ஹெலி தாக்குதல்

நேற்று தொண்டமானாறு பகுதியில் ஹெலிகப்டர் ஒன்று கடும் தாக்குதலை பரவலாக நடாத்தியது.

இத்தாக்குதலினால் கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் பொருட்களை வாங்க கியூவில் நின்ற சின்னத்தம்பி விஜயகுமார் (18) காயமடைந்தார்.

ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்வீசப்பட்டன. (71,32)

## பண்ணை-மண்டைதீவு படகுச் சேவை அரச ஊழியருக்கு இலவச பயண வசதி

தீவுப் பகுதிக்கான போக்குவரத்தை இலகுவாக்கும் பொருட்டு பண்ணையிலிருந்து மண்டைதீவுக்கு பிரயாணிகள் படகுச் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இப் படகுச் சேவை நடாத்தப்படுகிறது. நோயாளர்களை அவசரமாகக் கொண்டு செல்ல வேண்டியேற்படும் வேளைகளில் இரவிலும் இப் படகுச் சேவை இடம் பெறுகிறது.

பிரயாணி ஒருவருக்கும் துவிச்சக்கரவண்டி, மூட்டை முடிச்சு என்பவற்றுக்கும் தலா பத்துரூபா கட்டணமாக அறவிடப் படுகின்றது.

அரச ஊழியர்களுக்கு இலவச பயண வசதி வழங்கப் பட்டுள்ளது.

அராலித்துறை வழியாகப் பயணம் செய்வதைவிட மிக்க குறைந்த நேரத்தில் இந்த பண்ணை-மண்டைதீவு மார்க்கத்தில் பயணம் செய்யக் கூடியதாக உள்ளது.

(ப- 17, 20)

## தீவுப்பகுதிகளில் தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளில் தற்போதுஅத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு என்றுமில்லாதவாறு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (ப11)

## இடம் பெயர்ந்த மாணவர்கள் அலைக்கழிகின்றனர்

இராணுவ நடவடிக்கையினால் வலி வடக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தற்காலிகமாக வேறு பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களை சில பாடசாலை அதிபர்கள் அலைக்கழித்து வருவதாக தெரிய வந்துள்ளது

தற்காலிகமாகக் கல்விகற்கும் மாணவர்களது வகுப்புக்களை உறுதிப்படுத்தும் கடிதங்களை மாணவர்களின் சொந்தப் பாடசாலை அதிபர்களிடம் பெற்று வரும்படியும் அறிவிக்கப்படுகிறது.

தற்காலிகமாக படிப்பினும் வசதிகள் சேவைக்கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவப் பணம் நன்கொடை என்பனவும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இவை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியன எனக் கல்விப் பணிப்பாளர் பணித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நகரப்புறங்களில் தங்கியுள்ள அகதிகளின் பிள்ளைகளுக்கு நகரப்புறப் பாடசாலைகளில் இன்னமும் இடம் கிடைக்காமல் அவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேபோல கடந்தவாரம் வல்வெட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்த பிள்ளைகளும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(32)

## முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு மதிய உணவு முத்திரைகள்

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மூன்று மாத மதிய உணவு முத்திரைவந்து சேர்ந்துள்ளது.

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகைமாதங்களுக்கான உணவு முத்திரைகளே வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி முத்திரைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டுள்ளன. (32,38)

## கொழும்பு செல்வதற்கு ஏழு நாள்கள் தேவை

கொழும்பு செல்லும் பயணிகள் வவுனியாவைக் கடக்க ஏழுநாள்கள்செலவாகின்றன.

வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் இவர்களை தொகுதி தொகுதியாகவும் அனுப்புவதால் வவுனியாவில் ஏழு நாள்கள் பொழுதைக் கழிக்க நேரிடுவதாக அங்கிருந்து வருவோர் தெரிவிக்கின்றனர். (38)

## 400 திருமலை அகதிகளுக்கு மலேரியா பீடித்துள்ளது

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 400 திருமலை அகதிகள் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினரால் குடிசைகள் அமைத்து குடியிருத்தப்பட்ட இவ்வகதிகள் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளினதும் வைத்திய அதிகாரியினதும் உதவிகள் இன்றி இந்நோயினால் அவதிப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபரின் முயற்சியினால் 4000 இருவித மலேரியாக் குளிசைகள் வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (38)

### தமிழ்நாட்டில்...

திட்டமிட்டுள்ளனர்.

வாகனப் போக்குவரத்து அனைத்தையும் இன்றுநிறுத்தி வைக்குமாறு கோரிய முதலமைச்சர் கருணாநிதி இதுவரை இது தொடர்பாக இருபதாயிரம் பேர் கைதானதாகக் குறிப்பிட்டார்.

### முல்லைத்தீவுப்...

புதுக்குடியிருப்பு பொக்கனை பகுதியில் கரைவலைத் தொழிலில் மீன் கிடைக்கின்றபோதிலும் அவற்றை கருவாடாகப் பதப்படுத்த முடியாத நிலையும் வெளியூர்களுக்கு அனுப்ப முடியாத சூழ் நிலையும் ஏற்பட்டுள்ளது

இத்தகைய நடவடிக்கையால் வருமானமின்றி மீனவர்கள் கஷ்டப்படுகிறார்கள். (38)

### வீரவேங்கை...

வீரவேங்கைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக திரண்டிருந்தனர்.

பிற்பகல் மூன்று மணியளவில் கோப்பாயிலுள்ள மாவீரர் மயானத்தில் வீரவேங்கையின் உடல் தகனம் செய்யப்பட்டது.

கடந்த 23-ம் திகதி ஆனையிறவு இராணுவ முகாமில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த வீரவேங்கை பற்றிக் நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (70)

### சமரசமான...

அதை விரும்பவில்லையே'' எனக் கேட்டபோது, ''பொதுவுடமை, முதலாளித்துவம், ஐரோப்பிய பொதுச் சந்தை, நேற்றோ முதலிய எந்த அணியிலும் சேரத சுவீடன் முதலிய சிறிய நாடுகள் உதவத் தயாராய் உள்ளன. அவற்றுக்கு எதிர்ப்பும் இராது ஆனால் ஸ்ரீலங்கா அரசு அதனை விரும்புமா என்பதே கேள்வி'' என்றார்! அவர்.

''குடிமக்கள் வாழும் பகுதிகள் குண்டுவீசி அழிக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் இந்த அணுகு முறையால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

### கூடந்த...

வழங்கப்பட்ட அதிகாரங்கள் யாழ் ஆஸ்பத்திரி பணிப்பாளருக்கு பெயரளவிலேயே உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது (ப11)

### சோமாலிய...

கெரில்லாக்களும் மக்களும் முற்றுகையிடுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பே ஜனாதிபதி மரே தனது அலுவலக மாடியில் இருந்து ஹெலி மூலம் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

மரேயின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக சோமாலியா தேசியக் காங்கிரஸ் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து கடந்த ஒரு மாதமாக கடும் மோதலைத் தொடர்ந்து சோமாலியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### வைத்திய ...

கரணங்கள் கொழும்பில் உள்ள செஞ்சிலுவைத் தலைமையகத்தில் தவம் கிடக்கின்றன.

மேலும் யாழ் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு தேவையான உபகரணங்களின் தொகுதி பற்றியவிபரங்களை செஞ்சிலுவை அனுப்பியும் இரண்டு மாதமாக யாழ்வர அனுமதியை கூட்டுப்படைத் தலைமையகம் மறுத்து வருகிறது. (74)

### அமைச்சர்...

வுள்ளார்.

பேச்சுகளின் போது இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் குறித்தும் பேச்சு நடாத்தப்படவுள்ளது. எனினும் இலங்கை உள் விவகாரத்தில் இந்தியா தலையிடமாட்டாது என அமைச்சர் சுக்ளா இலங்கை அரசிற்கு உறுதி வழங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

1987 இல் கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின் இங்கு வரும் இந்திய அமைச்சர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு வரும் சுக்ளாவுடன் இருபது இந்தியப்பத்திரிகையாளர்களும் வருவதாக தெரிவிக்கப்பட்டது. சுக்ளா தனது விஜயத்தின் போது எதிர்க்கட்சித்தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடனும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடனும் பேச்சு நடாத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம் அமைச்சர் சுக்ளா தனது கொழும்புப் பேச்சுக்களின் போது இனப் பிரச்சினைக்கு ராணுவத் தீர்வைவிட பேச்சுவார்த்தைகள் மூலம் தோன்றும் அரசியல் தீர்வே சிறந்ததாக இருக்கும் என்று வலியுறுத்துவார் என இந்திய வானொலி தெரிவித்தது.

### அகதிகளுக்கு...

இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் கடந்த வியாழனன்று அப்பகுதியிலுள்ள 7 வீடுகளை எரித்துள்ளனர். (71)

### வீடமைப்பு...

இந்நடவடிக்கை தொடர்பாக சுவீடன் அரசு இலங்கையரசுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளதாம்.

இலங்கையரசுக்கு எந்த வித திட்டத்துக்குரிய கடன்களையோ, இதர உதவிகளையோ எதிர்காலத்தில் வழங்குவது இல்லையென சுவீடன் முடிவு செய்துள்ளது. (ப 11

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடுடச்சு வீதி, "லக்ஷ்மிபில்டிங்ஸ்" உள்ள அச்சகத்தில் 28-01-1991இல், அச்சிட்டு வெளியிடப் பெற்றது.